[25th March 1959

are that the applicants should have completed S.S.L.C. or any other examination equivalent thereto and should be good speakers in Tamil. Preference is given to those, who have done service to the cause of the removal of untouchability. The age should be between 25 and 30 years, and in the case of candidates belonging to Scheduled Castes or Scheduled Tribes, the upper age limit is 35 years. In special cases, the age rule is relaxed. There are no Assistant Sevaks at present. It is the duty of the Deputy Sevaks to create a proper psychology among the Harijans and non-Harijans to facilitate the removal of untouchability. For this purpose, the Deputy Sevaks will arrange for meetings, social dramas, bhajans, etc., and also work for throwing open to the Harijans, public wells, tanks, hotels and temples.

Sri P. G. MANICKAM : இந்திய சர்க்காரிடமிருந்து மேற்கொண்டு ஹரிஜன சேவக்குகளுக்கும், தாழ்த்தப்பட்டோர் லீகுக்கும் தொகை ஒதுக்கப்படவில்லை. அப்படி ஒதுக்குவதாக இருந்தால் அதிக கிராண்டு கொடுக்க எற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : எற்கனவே ஒவ்வொரு ஜில்லாவிலும் 3 டெபுடி சேவக்குகள் ஒரு ஹரிஜன சேவக் இருந்தார்கள். அவர்கள் செய்கிற வேலை போதவில்லை என்று தாலூகாவிற்கு ஒரு ஹரிஜன சேவக் போட எற்பாடு செய்திருக்கிறோம். இதற்காக தாழ்த்தப்பட்டோர் லீக் செய்த பிரசாரம் முதலியவற்றையெல்லாம் சேர்த்து சர்க்காரே பிரசாரம் செய்யலாம் என்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியத்தை நிறுத்தி இப்படி செலவு செய்கிறோம்.

Sri S. NAGARAJA MONIGAR : தாலூகா பூராவும் இவர்கள் சுற்றி வேலை செய்ய வேண்டியிருப்பதால் இந்த கிராண்டிலிருந்து இவர்களுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுக்க அனுமதிக்கப்படுகிறதா ?

The Hon Sri P. KAKKAN : கனம் மாணிக்கம் மானியத்தை என் நிறுத்திவிட்டார்கள் என்று கேட்டார்கள். அதற்கே பணமில்லை என்கிற போது சைக்கிள் வாங்கப் பணம் எது ?

Sri K. B. S. MANI : சேவக்குகளுக்கு எஸ். எஸ். எல். ஸி. வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள் ஆசிரியர் உத்தியோகத்திற்கும் அரசாங்க உத்தியோகத்திற்கும் போகிறார்களே தவிர தற்காலிகமாக இந்த உத்தியோகத்திற்கு வருவதில்லை. ஆகவே கம்ப்ளீட் எஸ். எஸ். எல். ஸி.யாக இருந்தால் போதும் என்று சொல்வார்களா ?

The Hon Sri P. KAKKAN : கம்ப்ளீட் ஆக இருந்தாலும் ஹரிஜன சேவையில் ஆர்வமும், ஈடுபாடும் உடையவர்களாக இருந்தால் அது கவனிக்கப்படும்.

Drought conditions in Kallakurichi Taluk

* 993 Q.—Sri C. NATARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any representation from the public about the drought conditions in Kallakurichi Taluk; and

(b) whether the Government have any proposal to grant full remission of land revenue this year and give up the collection of small savings from the affected agriculturists ?

25th March 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes.

(*b*) The Government have granted remission of 50 per cent of assessment in respect of all dry lands with an outturn of six annas and less, excluding lands in which wet or irrigated crops were raised and harvested successfully with the aid of well water. The question of giving up the collection of small savings from the affected agriculturists does not arise as the investments under that scheme by the agriculturists are purely voluntary.

8-50 a.m.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கள்ளக்குறிச்சி தாலூகா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே 50 சதம் ரெவின்யூ வஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பூராவும் தள்ளிக்கொடுக்க வேண்டும் என்பது மக்களுடைய விருப்பமாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மக்களின் விருப்பம் எப்படியோ இருக்கக்கூடும். ஆனல் அங்குயிருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து எந்த வகையில் சலுகை கொடுக்கவேண்டுமோ அந்த வகையிலே கொடுக்கப்பட்டு வருகிறது. நஞ்சை நிலத்திற்கு சாதாரண வஜா கொடுக்கும் உரிமை கலெக்டரிடம் இருக்கிறது. ஆகவே அவரே அதைக் கொடுக்கலாம்.

Harijan hostels in Tirunelveli District

* 994 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லாவில், வெல்பேர் ஆபீஸரால் நடத்தப்படும் சர்க்கார் உணவு விடுதிகளில் சமையல்காரர்களின் சம்பளம் என்ன ?

(ஆ) ஹரிஜன ஹாஸ்டலிலுள்ள சமையல்காரர்களின் சம்பளம் என்ன ?

(இ) இதில் வித்தியாசம் உள்ளதா ? அப்படியானல், என்ன காரணம் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The pay of cooks in Government Harijan Hostels in Tirunelveli district is as follows :—

Name of the Hostel. (1)	Pay of the Cooks. (2)
(1) Government Girl's Hostel, Palayamoottai.	Rs. 20 per mensem each with free meals for ten months and Rs. 30 per mensem without meals for 2 months.
(2) Government Kasturibai Girls' Hostel, Tuticorin.	Do.
(3) Government Harijan Boys' Hostel, Mangalapuram.	Do.
(4) Government College Boys' Hostel, Palayamkotti.	Rs. 25 per mensem each with free meals for ten months and at Rs. 35 per mensem for two months without meals.
(5) Government High School Boys' Hostel, Palayamkottai.	Rs. 23 per mensem each with free meals for months and Rs. 83 per mensem for two months without meals.